# சார்பு நீதிமன்றம், அவிநாசி,

## முன்னிலை: திரு.C.செந்தில்குமார், B.Com.,B,L.,

## சார்பு நீதிபதி, அவிநாசி.

2026 ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 02–ஆம் நாள், திங்கள்கிழமை

**இ.நி.ம.எண்.05/2025**
**in**
**அ.வ.எண்.226/2021**

1 . K.ஜோதிமணி
2. C.தங்கமணி ... மனுதாரர்கள்/ 1, 2 பிரதிவாதிகள்

**//எதிர்//**

1. கருணையம்மாள்
2. K.பாலுசாமி
3. K.மயில்சாமி
4. K.மகாசாமி ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக கடந்த 21.01.2026–ஆம் தேதியில் இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்கள்/1, 2–ம் பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் **திரு.C.ராஜா ராகவன்** அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் **திரு.M.செல்வராஜ்** அவர்கள் ஆஜராகியும், ஆவணங்களை பரிசீலித்தும் இதுநாள் வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

இந்த மனு மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் வாதிகள் தரப்பு சாட்சி வா.சா.1–ஐ மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டி ரீ–கால் செய்து உத்தரவிடக்கோரி அன்டர் ஆர்டர் 18 ரூல் 17 சிபிசி படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுவின சுருக்கம்</u>:–

அசல் வழக்கு விளம்புகை பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது கடந்த 15.09.2025–ம் தேதிக்கு இதர சாட்சியத்திற்காக வேண்டி வாய்தா போடப்பட்டுள்ளது. வாதிகள் தரப்பு சாட்சியான வா.சா.1–ஐ பிரதிவாதிகள் தரப்பில் ஏற்கனவே குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் முக்கியமான காரணங்களை பொறுத்து வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அதனால், வா.சா.1–ஐ மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டி உத்தரவிடக்கோரிய இந்த ரீ–கால் மனுவை அனுமதித்து உத்தரவிட வேண்டும் என்று கேட்டு இந்த மனுவை அன்டர் ஆர்டர் 18 ரூல் 17 சிபிசி படி மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ளார்கள்.

3. <u>எதிருரையின் சுருக்கம்</u>:–

மனுதாரர்கள் / பிரதிவாதிகள் இந்த மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் தவறானது, பொய்யானது, சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல, தள்ளுபடி செய்யக்கூடியது ஆகும். அசல் வழக்கானது விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதும், அந்த வழக்கானது பிரதிவாதிகள் தரப்பில் இதர சாட்சியத்திற்காக 15.09.2025–ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்ததும், அதேபோல், வாதிகள் தரப்பு சாட்சியான வா.சா.1 ஏற்கனவே பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு விட்டதாகவும் சொல்லியுள்ளது உண்மை. ஆனால், வெறுமனே வா.சா.1–ஐ மீண்டும் முக்கியமான காரணங்களுக்காக குறுக்கு விசாரணை செய்ய வேண்டி உள்ளதாக தெரிவித்துள்ளது ஏற்றுக்கொள்ளும் வகையில் இல்லை. ஏற்கனவே வா.சா.1–ஐ கடந்த 28.11.2023, 07.12.2023 தேதிகளிலும், பின்னிட்டு வா.சா.ஆ.12 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்ட பின்பு 09.02.2024–ம் தேதியிலும் விரிவாக

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்து விட்டார்கள். அதனைத்தொடர்ந்து பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 சாட்சி விசாரிக்கப்பட்டு அவரை கடந்த 14.07.2025–ம் தேதியில் வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணையும் செய்யப்பட்டு விட்டுள்ள நிலையில் தான் IA.No.3/2025 என்ற மனுவை பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்து அது அனுமதிக்கப்பட்டதின் பேரில் மீண்டும் பி.வா.சா.1 சாட்சி விசாரிக்கப்பட்டு, இதர சாட்சியத்திற்காக வேண்டி வழக்கை ஒத்திவைக்கப்பட்டுள்ளநிலையில் தான் சட்டப்படியான காரணங்கள் எதுவும் குறிப்பிட்டு சொல்லாமல் வெறுமனே வா.சா.1–ஐ மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டி உள்ளதாகவும், அதனால் வா.சா.1–ஐ ரீ–கால் செய்து உத்தரவிடக்கோரிய இந்த மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல, தள்ளுபடி செய்யக்கூடியது ஆகும் என்று தெரிவித்து எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

**4. <u>பிரச்சனை</u>:–**

மனுதாரர்கள் / பிரதிவாதிகளின் அன்டர் ஆர்டர் 18 ரூல் 17 சிபிசி படியான இந்த ரீ–கால் மனு சட்டப்படி அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை ஆகும்.

**5. தீர்வு:–**

**5.1** இந்த மனு மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் ஏற்கனவே குறுக்கு விசாரணை செய்யப்பட்டுவிட்டுள்ள வாதிகள் தரப்பு சாட்சியான வா.சா.1–ஐ மீண்டும் முக்கியமான காரணங்கள் குறித்து குறுக்கு விசாரணை செய்ய வேண்டி ரீ–கால் செய்து உத்தரவிடக்கோரி அன்டர் ஆர்டர் 18 ரூல் 17 சிபிசி படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால், எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் ஏற்கனவே வா.சா.1–ஐ கடந்த 28.11.2023, 07.12.2023 தேதிகளிலும், பின்னிட்டு வா.சா.ஆ.12 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்ட பின்பு 09.02.2024–ம் தேதியிலும் விரிவாக பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்து

விட்டார்கள் என்றும், அதனைத்தொடர்ந்து பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 சாட்சி விசாரிக்கப்பட்டு அவரை கடந்த 14.07.2025–ம் தேதியில் வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணையும் செய்யப்பட்டு விட்டுள்ள நிலையில் தான் IA.No.3/2025 என்ற மனுவை பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்து அது அனுமதிக்கப்பட்டதின் பேரில் மீண்டும் பி.வா.சா.1 சாட்சி விசாரிக்கப்பட்டு, இதர சாட்சியத்திற்காக வேண்டி வழக்கை ஒத்திவைக்கப்பட்டுள்ளநிலையில் தான் சட்டப்படியான காரணங்கள் எதுவும் குறிப்பிட்டு சொல்லாமல் வெறுமனே வா.சா.1–ஐ மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டி உள்ளதாகவும், அதனால் வா.சா.1–ஐ ரீ–கால் செய்து உத்தரவிடக்கோரிய இந்த மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், அதனால், மனுதாரர்கள் / பிரதிவாதிகளின் இந்த ரீ–கால் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**5.2.** இந்நிலையில், இந்த அசல் வழக்கு கோப்பை கவனமாக பரிசீலித்து பார்க்கும் பொழுது, எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தாவா சொத்தை பொறுத்து நிரந்தர தடையுறுத்து கட்டளை பரிகாரம் கோரியும், அ.வ.எண்.99/2018 வழக்கில் இந்நீதிமன்றம் கடந்த 14.07.2018–ம் தேதியில் பிறப்பித்த சமரச தீர்ப்பாணை மோசடியானது, செல்லாதது என்று விளம்புகை செய்யக்கோரியும் தாக்கல் செய்துள்ளார்கள். அந்த வழக்கை ஆட்சேபித்து பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்து எதிர்வழக்காடி வந்துள்ளார்கள். இந்த நிலையில், வாதிகள் தரப்பில் வா.சா.1 சாட்சி மட்டும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். பின்பு, பிரதிவாதிகள் தரப்பில் 2–ம் பிரதிவாதி பி.வா.சா.1 சாட்சியாக விசாரிக்கப்பட்டு இதர சாட்சியத்திற்காக வேண்டி வழக்கு பல வாய்தாக்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட நிலையில் தான், வாதிகள் தரப்பு சாட்சியான வா.சா.1 முக்கியமான காரணங்களுக்காக மேற்கொண்டு குறுக்கு விசாரணை செய்ய வேண்டி உள்ளதாகவும், அதனால், வா.சா.1–ஐ மீண்டும் ரீ–கால் செய்து உத்தரவிடக்கோரி

இந்த அன்டர் ஆர்டர் 18 ரூல் 17 சிபிசி படியான மனுவை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள்.

**5.3.** இந்நிலையில், மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் வா.சா.1–ஐ மேற்கொண்டு குறுக்கு விசாரணை செய்ய வேண்டி மீண்டும் ரீ–கால் செய்து உத்தரவிடக்கோரி இந்த அன்டர் ஆர்டர் 18 ரூல் 17 சிபிசி படியான இந்த மனு சட்டப்படி அனுமதிக்கத்தக்கதா? என்பதை பொறுத்து பார்க்கும் பொழுது, வாதி தரப்பு சாட்சியான வா.சா.1–ஐ பிரதிவாதிகள் தரப்பில் ஏற்கனவே வா.சா.1–ஐ கடந்த 28.11.2023, 07.12.2023 தேதிகளிலும், பின்னிட்டு வா.சா.ஆ.12 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்ட பின்பு 09.02.2024–ம் தேதியிலும் விரிவாக தரப்பில் குறுக்கு விசாரணை செய்து விட்டார்கள் என்பதை வா.சா.1–ன் வாய்மொழி சாட்சியத்தில் பரிசீலிக்கையில் தெரிய வருகிறது. இந்த நிலையில், எந்த காரணத்திற்காக வேண்டி வா.சா.1–ஐ மேற்கொண்டு குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என்ற விவரம் எதுவும் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தங்களது மனு அபிடவிட்டில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. ஆனால், மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தங்களது மனு அபிடவிட்டில் இந்த அசல் வழக்கில் முடிவு காண்பதற்கு ஏதுவான வகையில் முக்கியமான விவரங்கள் குறித்து வா.சா.1–யிடம் குறுக்கு விசாரணை செய்ய வேண்டிய அவசியம் உள்ளது என்று மட்டும் தான் குறிப்பிட்டு சொல்லியுள்ளார்கள். மற்றபடி சட்டப்படியான காரணங்கள் எதுவும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. இந்த நிலையில், மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தங்களுடைய மனு அபிடவிட்டில் இந்த மனுவை அனுமதிக்கும் வகையில் சட்டப்படியான காரணங்கள் எதுவும் குறிப்பிட்டு சொல்லப்படாத நிலையில் வெறுமனே ஏற்கனவே குறுக்கு விசாரணை செய்யப்பட்டு விட்டுள்ள வா.சா.1–ஐ மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டி ரீ–கால் செய்து உத்தரவிடக்கோரியுள்ள இந்த மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. அதனால்,

மனுதாரர்கள் / வாதிகளின் இந்த ரீ–கால் மனுவை தள்ளுபடி செய்வது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக, மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் இந்த மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

2026–ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 02–ஆம் நாள் உத்தரவு பகரப்பட்டது.

**ஒம்/–C.செந்தில்குமார்**
**சார்புநீதிபதி,**
**அவிநாசி.**

| | |
|---|---|
| **மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்–** | இல்லை |
| **மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்**:– | இல்லை |
| **எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சிகள்–** | இல்லை |
| **எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்**:– | இல்லை |

**ஒம்/–C.செந்தில்குமார்**
**சார்புநீதிபதி,**
**அவிநாசி.**

# சார்பு நீதிமன்றம், அவிநாசி,
## முன்னிலை: திரு.C.செந்தில்குமார், B.Com.,B,L.,
## சார்பு நீதிபதி, அவிநாசி.

2026 ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 02–ஆம் நாள், திங்கள்கிழமை

**இ.நி.ம.எண்.05/2025**
**in**
**அ.வ.எண்.226/2021**

1 . K.ஜோதிமணி, வயது 55, க/பெ.A.கந்தசாமி, வசிப்பிடம் கதவு எண்.1/132/2, வெள்ளாண்டிபாளையம் மஜரா, தெக்கலூர் கிராமம், அவினாசி தாலூக்கா, திருப்பூர் மாவட்டம்.

2. C.தங்கமணி, வயது 55, க/பெ.S.சின்னச்சாமி, வசிப்பிடம் கதவு எண்.19/41A, விநாயகர் கோவில் வீதி, வெள்ளாண்டிபாளையம் கிராமம், பள்ளப்பாளையம் அஞ்சல், மங்கலம் வழி, பல்லடம் தாலூக்கா, திருப்பூர் மாவட்டம்.

... மனுதாரர்கள்/ 1, 2–ம் பிரதிவாதிகள்

**//எதிர்//**

1. கருணையம்மாள், வயது 77, க/பெ.கருப்புச்சாமி (எ) கருப்பண கவுண்டர், வசிப்பிடம் கதவு எண்.9/81, பெரிய காட்டு தோட்டம், காமநாயக்கன்பாளையம், தெக்கலூர் கிராமம், அவினாசி தாலூக்கா, திருப்பூர் மாவட்டம்.

2. K.பாலுசாமி, வயது 59, த/பெ.கருப்புச்சாமி (எ) கருப்பண கவுண்டர், வசிப்பிடம் கதவு எண்.9/81, பெரிய காட்டுத் தோட்டம், காமநாயக்ககன்பாளையம், தெக்கலூர் கிராமம், அவினாசி தாலூக்கா. திருப்பூர் மாவட்டம்.

3. K.மயில்சாமி, வயது 57, த/பெ.கருப்புச்சாமி ( எ) கருப்பண கவுண்டர், வசிப்பிடம் கதவு எண்.9/81, பெரிய காட்டு தோட்டம், காமநாயக்கன்பாளையம், தெக்கலூர் கிராமம், அவினாசி வட்டம், திருப்பூர் மாவட்டம்.

4. K.மகாசாமி, வயது 54, த/பெ.கருப்புச்சாமி (எ) கருப்பண கவுண்டர். வசிப்பிடம் கதவு எண்.9/81, பெரிய காட்டு தோட்டம், காமநாயக்கன்பாளையம், தெக்கலூர் கிராமம், அவினாசி தாலுாக்கா, திருப்பூர் மாவட்டம்.

... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இந்த மனு மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் வாதிகள் தரப்பு சாட்சி வா.சா.1–ஐ மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டி ரீ–கால் செய்து உத்தரவிடக்கோரி அன்டர் ஆர்டர் 18 ரூல் 17 சிபிசி படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனு தாக்கலான நாள்:– 15.10.2025**

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக கடந்த 21.01.2026–ஆம் தேதியில் இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்கள்/1, 2–ம் பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் **திரு.C.ராஜா ராகவன்** அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் **திரு.M.செல்வராஜ்** அவர்கள் ஆஜராகியும், ஆவணங்களை பரிசீலித்தும் இதுநாள் வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## <u>உத்தரவாணை</u>

1. **மனுதாரர்கள்/ பிரதிவாதிகளின் இந்த மனு தள்ளுபடி செய்து உத்தரவாணை பிறப்பிக்கப்படுகிறது.**
2. **செலவுத்தொகை இல்லை.**

2026 ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 02–ஆம் நாள், எனது கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

**ஒம்/–C.செந்தில்குமார்**
**சார்புநீதிபதி,**
**அவினாசி.**